ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௬. விபவ௵ பங்குனி௴ பகுதி ௩.
Vol 6. *March & April 1929.* No. 3.

பன்மணித்திரள்.

பஞ்சாஹுதி.

சம்சாரிசேதனன் இம்மையில் புண்ணியபாப ரூபமான கர்மங்களைச் சேகரித்து இவற்றின் பலன்களை ஸ்வர்க்க நரகங்களில் அநுபவித்துத் திரிபவனாவான். இவன் புண்ணியபாபரூப கர்மங்களை ஸ்வர்க்க நரகங்களில் அநுபவித்துக் கர்மக்குறையோடே பூமியில் கர்ப்பவாஸம் பண்ணுகைக்கு வரும் வழியில் இவன் படும்பாட்டை வேதாந்தத்தில் பஞ்சாக்னிவித்யை என்றவிடத்தில் ஓதி வைத்தது.

இவன் மறுமைப் பலனை யநுபவித்து ஒரு மாதாவின் வயிற்றில் கட்டுண்கிறவரை ஐந்திடங்களில் தங்குகிறான். அந்த ஐந்திடங்களை ஐந்தக்னியாகவும் ஜீவனை ஹவிஸாகவும் அந்தப் பஞ்சாக்னி வித்யையில் ரூபகஞ்செய்யப்பட்டுள்ளன. இவை ஈண்டுப் பஞ்சாஹுதியென்று வழங்கப்பட்டன. அவை வருமாறு:—

ஜீவன் யாதனாசரீரத்தால் நரகாநுபவஞ் செய்து அந்தச் சரீரத்தை அவ்விடத்தில் விட்டுப் பின்பு புண்ணிய சரீரத்தை எடுத்து ஸ்வர்க்காநுபவம் பண்ணி அவ்விடத்தில் அச்சரீரத்தை விட்டு ஸூக்ஷ்மசரீரத்துடன் ஆகாசத்தில் வந்து சேருகிறான். சூரியன் இவனைத் தன் கிரணங்களாற் பற்றி மேகத்தில் விடுகிறான். பின் மேகம் வருஷ ரூபமாக வர்ஷிக்குமளவும் அம்மேகத்தில் தங்கி

யிருந்து அதன் பிறகு வர்ஷதாரைகளுடன் பூமியை யடைகிறான். பின்னர் அந்த ஜலம் பயிர்களுக்குத் தாரகமாக வருமளவில் அதன் வழியாகப் பயிரை யடைகிறான். அந்தப் பயிர் பக்குவமாய் அந்த வடிவமாக மாறுபடும்வரை அங்கே தங்கியிருந்து அந்த அந்நமானது புருஷசரீரத்திலே புகுந்து சுக்லவடிவமாய் மாறுபடும் வரை அவ் விடத்திலிருந்து பின் ஸ்திரீ புருஷர்களின் கூட்டத்தால் சுக்லத் தின் வழியாக ஸ்திரீயின் வயிற்றிற் புகுந்து கர்ப்பமாய்ப் பரிணமிக் கிறான்.

இங்ஙனம் ஸ்வர்க்கம், ஆகாசம், மேகம், வர்ஷதாரை என்ற இவைகளினின்றும் மாதாவின் வயிற்றை யடைந்த ஜீவன் மாதாவி னால் உண்ணப்பட்ட அறுசுவை யுணவுப்பொருள்களுள் காரமான உணவையுண்டபோது அது பொறுக்கலாற்றாது துடிதுடித்துப் பத்துமாதம்வரை அங்கிருந்து பின் தட்டான் சட்டக்கோலிலிருந்து கம்பியை இழுப்பதுபோல் மாதாவின் பிறப்பிடத்திலிருந்து மிகவும் துன்பமுற்றுப் பிறக்கிறான்.

பிறந்த இக்குழவியாம்நிலையில் இவன் தினவு தின்ற விடத்தை யும் சொரிதற்காற்றாது தன் போஷணாதிகளெல்லாம் தாய் தந்தைய ரின் அதீனமாக வாழ்ந்து பாலப் பருவம் வந்துற்றபோது விளையாட் டில் பொழுதைப்போக்குகிறான். அதன்பின் காளைப்பருவமான நிலை யில் நரகத்திற்குக் காரணமான விஷயாந்தரங்களில் மகிழ்ச்சியுடைய வனாய்க் காலத்தைப்போக்கி முதுமைப் பருவமடைந்து மிகவும் அசக்தனாய்க் காலத்தைக்கழித்துப்பின் யமன் வசப்பட்டு அல்லலுறு கிறானென்று சொல்லப்பட்டது.

மாந்தரெல்லோருக்கும் வைராக்யமுண்டாகி நித்யாநந்த வாழ் வை யடைய வேண்டுமென்ற கருத்தால் பஞ்சாக்னிவித்யையில் ஜீவ னது நிலைமை இங்ஙனம் வகுத்துரைக்கப்பெற்றதென்று கொள்ளத் தக்கது.

பிள்ளைவரந்தரும் பெருமாள் தாஸர் வார்த்தை.—

"எம்பெருமான் வெறுக்கும்; மறக்கும்; பொறுக்கும்; ஒறுக்கும். பிரயோஜநாந்தரபரரைக் கண்டால் நம்முடைய ரக்ஷகத்வத்தைப் பறித்துக்கொண்டு போவதே! என்று வெறுக்கும்; தன்னளவில்

பண்ணின அபசாரத்தை மறக்கும்; ஆஜ்ஞாதிலங்கனத்தைப் பொறுக்கும்; பாகவதாபசாரத்தை ஒறுக்கும்” என்பதாம்.

பிரயோஜநாந்தரபரரைக்கண்டால் நம்முடைய ரக்ஷகத்வத்தைப் பறித்துக்கொண்டு போவதே என்று வெறுக்கும் என்பது ஒப்புயர்வற்ற பரமப்ரயோஜன்மாகிய கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தைக் கொடுக்கவல்ல ஸர்வரக்ஷகனுகிய எம்பெருமானிடத்தில் அந்தக்கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தைப் பெற்று மகிழாமல் ‘ஆத்மாநுபவமே சாலும்’ என்கிற ப்ரயோஜநாந்தரபரராகிய கைவல்பர்களைக் கண்டால் ‘நம்முடைய ரக்ஷகத்வத்தை அபகரிக்கின்றனரே’ என்று அவன் வெறுக்கிறுன் என்றவாறு. ஸர்வேசுவரனிடத்திலே ரக்ஷகத்வம் என்ற தர்மம் குடிகொண்டிருக்கிறது. ஜீவனிடத்தில் ரக்ஷ்யத்வம் (அவனுல் ரக்ஷிக்கப்படுந்தன்மை) குடிகொண்டிருக்கிறது. இங்ஙனமிருக்கக் கைவல்யர்கள் ஸர்வேசுவரனுடைய ஸர்வரக்ஷகத்வத்தைக்கணிசிக்காமல் ஆத்மாநுபவமே பரமபுருஷார்த்தமென்று கருதுமியல்புடையவராதலால் இவரது தன்மையைக் கண்டு ஸர்வேசுவரன் வெறுக்கிறுன். ரக்ஷகத்வத்தைப் பறித்துக்கொண்டு போவதாவது ஆத்மா தனக்கில்லாத ரக்ஷகத்வ தர்மத்தை ஏறிட்டுக்கொள்வதாம். கைவல்யர்கள் எம்பெருமானுடைய வெறுப்புக்கு விஷயமாகி நிற்கிற இவர்களது நிலைமைகண்ட பெரியாழ்வார் “ஏடுநிலத்தில்” என்ற பாசுரத்தில் இவர்களை முன்னதாக அழைத்தார். இது நிற்க,

வேண்டுதல் வேண்டாமையிலானுகிய ஸர்வேசுவரனுக்கு வெறுப்புண்டென்பது எவ்வாறு பொருந்துமெனின்; *உத்ஸர்க்காபவாதநியாயத்தால் பொருந்துமென்க. பின்வருவனவற்றிற்கும் இந்த நியாயத்தால் சமாதானம் செய்து கொள்க.

---

* உத்ஸர்க்காபவாத நியாயமாவது:—ஸாமாந்ய விசேஷ நியாயமாம். அஃதாவது சாஸ்திரத்தில் ‘எல்லா ஜீவனையும் ஹிம்ஸிக்கலாகாது’ என்று சொல்லிய பொதுவிதியானது ‘அக்னிஸோமீய யாகத்தில் பசுவை ஹிம்ஸிக்க வேண்டும்’ என்று சொல்லிய சிறப்புவிதியைத் தடை செய்யா தொழிவதாம். பொது விதி யெல்லாம் சிறப்புவிதி யொழிந்த விடங்களில் பிரவர்த்திக்கும். அதுபோல இங்கு ஸர்வேசுவரன் வெறுப்பற்றவனுயிருப்பான் என்ற பொதுவசனம் பிரயோஜநாந்தரபரரைக்கண்டவிடத்தில் வெறுப்புடையவனுயிருப்பானென்ற சிறப்புரையை மறுக்காதென்றறியத்தக்கது.

தன்னளவில் பண்ணின அபசாரத்தை மறக்குமென்பது ஸர்வேசுவரன் தன்னடியார்கள் தன் விஷயத்திற் செய்த குற்றங்களை மறந்து விடுகிறானென்றவாறு. விஸ்மிருதி (மறதி) என்பது சிறந்த குணமாகப் பாராட்டப்படாதாயினும் ஸர்வேசுவரனுக்கு அடியார்களின் குற்றத்திலுண்டாகிற மறதி மிகவும் பெருமை யுடையதாக மதிக்கப்படும். இதுபற்றியே ஸஹஸ்ரநாமத்தில் 'அவிஜ்ஞாதா' (அறியாதவன்) என்று ஸர்வேசுவரனுக்கு ஒரு பெயராக எடுத்தாளப்பட்டது. அருளாளப்பெருமாளெம்பெருமானாரும், "...... தொண்டர் செயும், பல்லாயிரம் பிழைகள் பார்த்திருந்தும் காணும் கண், இல்லாதவன் காணிறை" என்றருளிச் செய்தார். ஆஜ்ஞாதிலங்கனத்தைப் பொறுக்குமென்பது தன்னடியார்கள் பக்திபாரவசியத்தால் சாஸ்திர விரோதமான செயலைச் செய்தாலும் அதைப் பொறுத்துக் கொள்வான் என்றவாறு. "காலாழும் நெஞ்சழியும் கண் சுழலு" மென்றபடி பகவத் விஷயத்தில் ஈடுபட்டுச் செயலற்ற கரணத்தையுடைய பெரியோர்கள் அக்காலத்தில் சாஸ்திர வசப்பட்டு நடப்பதென்பது அவர்கட்கியலாதாதலால் அதுபற்றி ஸர்வேசுவரன் அவர்களைச் சிக்ஷிக்கமாட்டானென்பது கருத்து. பாகவதாபசாரத்தை ஒறுக்குமென்பது பாகவத விஷயத்தில் அபசாரம் செய்தவர்களை அவசியம் தண்டிப்பான் 'என்றவாறு. "ஈசுவரன் அவதரித்துப் பண்ணின ஆனைத்தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பொறாமை" 'என்று ஜீயரருளிச் செய்வர்' என்று லோகதேசிகன் அருளிச்செய்ததினால் பாகவதாபசாரம் மிகவும் குரூரம் என்பதும், அவ்வபசாரம் செய்தவர்கள் எம்பெருமானுடைய நிக்ரஹத்துக்கு விஷயமாகி வருந்துவார்களென்பதும் பெறப்படும்.

உத்தாரகாசாரியர்.

எல்லாச் சேதனர்களையும் ஸம்ஸாரமாகிய கடலினின்றும் எடுத்து பரப்பிரம்மத்தை யடையும்படி செய்பவரே உத்தாரகாசாரியராவார். இந்த உத்தாரகத்வம் உடையவர் ஒருவர்க்கே உள்ளதென்பது நமது சித்தாந்தத்தின் துணிவு. இங்ஙனம் உரைத்தற்குப் பல சான்றுகள் உள்ளன. அவை வருமாறு:—

திருவரங்கச் செல்வனாகிய நம்பெருமாள் திருப்பவளச் செவ்வாய் திறந்து எம்பெருமானாரை நோக்கி 'உபய விபூதியின் செல்வத்தையும் உமக்கும் உமது சம்பந்தமுடையார்க்கும் தந்தோம்' என்றருளிச் செய்ததினாலும், திருவேங்கடமுடையான் இவரைக் குறித்து 'உமக்கும் உம்முடையார்க்கும் உபய விபூதியின் செல்வத்தைத்தந்தோமென்று நம் தெற்குவீட்டிலே சொன்னோம்'என்று உரைத்ததாலும், பேரருளாளர் யாதவப்ரகாசனுடைய ஸ்வப்பனத்தில் 'நம்மிராமாநுஜனை ஒரு ப்ரதக்ஷிணம் செய்து நீ ஸங்யஸிக்கக் கடவாய்' என்றருளியதினாலும், திருநாராயணப்பெருமாள் தொண்டனூரில் இவருக்கு ஸ்வப்பனந்தந்து அழைத்துக்கொண்டு போய் ப்ரஸன்னராய் 'என்னுடைய செல்வப் பிள்ளையன்றோ!' என்று இவர் எடுத்தணைக்கும்படி எதிராஜ சம்பத் குமாரராய் அமைந்ததினாலும், திருமாலிருஞ்சோலை அழகப்பிரான் 'நம்மிராமாநுஜனுடையார்க்கு அருளப்பாடு' என்றபோது ஆசார்யரெல்லாம் சென்று திருவடிகளில் ஸேவித்து நிற்க, பெரியநம்பிவழியார் சிலர் வாராமலிருக்கக் கண்ட அழகர் 'நாம் அழைக்க நீங்கள் வாராமலிருப்பதற்குக் காரணமென்?' என்று கேட்டருள அவர்களும் இராமாநுஜனுடையார்க்கு அருளப்பாடு என்று தேவரீரருளியதினால் அவர் எங்களுக்குச் சிஷ்யரென்று வாராதிருந்தோமென்று விண்ணப்பஞ்செய்தார்கள். அப்பொழுது அழகரும் தசரத வசுதேவாதிகள் நம்மைப் புத்திரனென்று கருதியதுபோலிருந்தது நீங்கள் இராமாநுஜனை சிஷ்யரென்று கருதியது என்று அருளியதாலும், ஒருநாள் அழகர் கிடாம்பியாச்சானை யழைத்து 'ஒன்று சொல்லாய்' என்றுரைக்க அவரும் "அபராத ஸஹஸ்ரபாஜநம்" என்று தொடங்கி "அகிஞ்சநம்" என்று சொல்ல; அழகரும் நம்மிராமாநுஜனை யுடையையாயிருந்தும் அகிஞ்சநம் என்று சொல்லப்பெறாய் என்று உரைத்தாலும்,

திருக்குறுங்குடிநம்பி உடையவரை அருளப்பாடிட்டு 'சேதனர்களை உஜ்ஜீவிப்பிக்க நாம் கணக்கற்ற அவதாரங்களைச் செய்தும் எவரும் நம்மை வந்து கிட்டாது மூடர்களாய் அதமமான கதியை அடைந்தார்கள். இப்பொழுது உமக்கு பல ஆத்மவர்க்கங்கள் அகப்பட்ட சூழ்ச்சியை நமக்கு உரைக்க வேண்டும்' என்று கேட்க,

உடையவரும், 'தேவரீர் கேட்குங் கிரமத்தில் கேட்கில் சொல்லு கிறேன்' என்று விடையளிக்க; நம்பியும், இவருக்கோர் ஆசனந்தந்து 'இனிச் சொல்லும்' என்ன உடையவரும் அவ்வாசனத்தில் பெரிய நம்பி எழுந்தருளியிருப்பதாகப் பாவித்து நம்பியின் திருச்செவியில் ஹிதத்தை விண்ணப்பஞ்செய்ய அன்றுமுதல் நம்பியும், 'நம்மிராமா நுஜனை யுடையோம்' என்றருளிச்செய்ததினும், மயர்வற மதிநலம் அருளப்பெற்ற நம்மாழ்வாரும் கலியின் கொடுமையால் ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்திற்கு விரோதம் வந்தெய்தா வண்ணம் திருத்தி உபதேசிக்கவல்லார் எம்பெருமானாரே யென்று தம்முடைய திவ்ய ஜ்ஞானத்தினாலே ஆராய்ந்து பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தைக்கண்டு "பொலிக பொலிக" என்று மங்களாசாசனஞ் செய்து "சென்று தொழுதுய்மின்" என்று இவரையே எல்லோர்க்கும் உத்தாரகராக அருளிச்செய்கையாலும், எல்லோரும் இவரது வாய்மொழியையும் செயலையும் பிரமாணமாகக் கையாண்டு வருகையாலும், மற்றுள்ள ஆசார்யர்களும் இவரது உக்த்யனுஷ்டானங்களில் நிஷ்டராய் நின்று தம்மைத் தஞ்சமாக அடைந்தவர்கட்கும் 'எம்பெருமானார் திருவடிகளே சரணம்' என்று உபதேசித்துவருவதாலும் எம்பெருமானாரே உத்தாரகாசாரியராவாரென்பது ஐயமின்றித் தெளியலாகும். மற்ற ஆசார்யர்களெல்லாம் உபகாரகாசாரியராவார்.

ஸ்ரீ:

ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சம்.

[மதுரை ஸம்ஸ்கிருத காலேஜ் பிரின்ஸிபால் ப்ராஹ்மஸ்ரீ V. S. ராமசாமி சாஸ்திரிகள் (B. A; B. L.) எழுதுவது.]

(38-ம் பக்கத்தொடர்ச்சி.)

எட்டாவது அதிகாரம்.

ஈசுவரன் பூமியில் அவதரித்தாரென்பது பொருந்துமா?

இக் கேள்விக்கு விடையளித்தல் மிகவும் அவசியமானது. நமது தேயத்தில் ஸ்ரீகிருஷ்ணபகவான் ஈசுவரனின் பூர்ணாவதார

மென்று திருடமான நம்பிக்கை யுண்டு. ஆனால் மேற்றிசையோருக்கும் அப்படிப்பைப்படித்தவருக்கும் அவ்விதமான நம்பிக்கையில்லை.

இவ்விடத்திலிரண்டு கேள்விகள் உதிக்கின்றன. அவை:— ஈசுவரன் பூமியில் அவதரித்தல் அவசியமா? 2, அப்படி யிருந்தால் கிருஷ்ணன் ஈசுவரனினவதாரமா? என்பனவாம்.

முதலாவது கேள்விக்கு இப்பொழுது விடையளிப்பாம். சிலர் ஈசுவரனே இலனென்று சாதிக்கிறார்கள். அந்த நாஸ்திகர்களைப் பற்றி நாமொன்றும் சொல்லப்புகவில்லை. அவர்களை நாம் கவனிக்க வேண்டாம். ஆஸ்திகர்களில் சிலர் ஈசுவரன் நிர்க்குணன் அவனுக்கு அவதாரம் எப்படி ஸம்பவிக்குமென வினவுகிறார்கள். நிர்க்குணனான ஈசுவரன் எவன்? அவனை நாம் எப்படிமனதில் கருத முடியும் என்று அவர்களைக் கேட்கிறோம். நிர்க்குணனான ஈசுவரனை மனதால் சிந்திக்கவொண்ணாது. ஈசுவரன் நிர்க்குணனாக இருக்கட்டும். அவரைச்சிந்திக்க நம்மனதுக்குச் சக்தியில்லை. எப்படி நான்கு கோணமுள்ளது உருண்டையென்று சொல்லும் அசம்பவத்தினை மனதால் சிந்திக்க முடியாதோ அதுபோல் நிர்க்குணனாகிய ஈசுவரனை நாம் மனதால் சிந்திக்க முடியாது. ஈசுவரன் நிர்க்குணனென்றால் சிருஷ்டித்தல் ரக்ஷித்தல் முதலிய காரியங்கள் அவர்க்கு எவ்விதம் ஒவ்வும். ஆகையால் நாம் ஈசுவரனை சகுணனென்றே கொள்வோம்.

சகுணனான ஈசுவரனுங்கூட பூமியிலவதரிப்பதற்கு அவசியமென்ன? அவன் இச்சாமயன். ஸர்வ சக்திமான். அவன் இச்சையால் எவ்விதமான வடிவத்தையும் எடுத்துக்கொள்வான். அவருடைய சக்திக்கு யாதொரு அளவுமில்லை. எவன் இந்தப் பிரபஞ்சத்துக்கு ஓர் உருவத்தை யளித்தானோ அவன் தானாகவே இச்சையால் எவ்வித உருவத்தையும் எடுக்கக்கூடுமல்லவா? ஆனால் எல்லா சக்தியும் வாய்ந்த அவன் ஜகத்தின் நன்மைக்காக இக்கேவலமான மனித உருக்கொண்டதின் காரணமென்ன? எவர் இச்சாமாத்திரத்தால் கோடிக்கணக்கான பிர்மாண்டங்களைச் சிருஷ்டித்து அழிக்க வல்லவரோ அவர் இராவணன், கும்பகர்ணன், கம்ஸன், சிசுபாலன் முதலியவர்களைக் கொல்வதற்காக ஜன்மம் எடுக்கவேண்டுமா? குழந்தைப் பருவம் அடைந்து தாயின் பாலை அருந்த வேண்டுமா? அ, ஆ, இ,

எழுதி சாஸ்திராப்பியாஸம் செய்யவேண்டுமா? அதன் பிறகு மனித ஜீவனத்தின் கஷ்டங்களை அநுபவிக்க வேண்டுமா? பிறகு தானே கையில் அஸ்திரமேந்தி யுத்தத்தில் தானும் அடிபட்டு எதிரியைத் தோற்கடிக்க வேண்டுமா? சிரமப்பட்டு துராத்மாக்களான எதிரிகளை வதைத்தல் வேண்டுமா? இக் கதைகளை யெல்லாம் நம்புவதெங்ஙனம்?

இவ்விதமாகச் சிலர் வாதிக்கிறார்கள். நம்போல் ஈசுவரனும் மனித உருக்கொண்டு நாம் அடையும் கஷ்டங்களை அநுபவித்தார் என்பது அவர்களின் எண்ணம் போலும். ஈசுவரன் சுகதுக்கங்களைக் கடந்தவர். அவருக்கு ஒன்றினாலும் கஷ்டமில்லை. ஜகத்தின் சிருஷ்டியும் பாலனமும் லயமும் ஈசுவரனுக்கு எவ்விதம் லீலை என்கிறோமோ அவ்விதமே அவதாரம் செய்தலும் ஈசுவரனின் லீலையாக ஏன் ஆகக் கூடாது? நினைத்த மாத்திரத்தில் துஷ்டர்களை ஸம்ஹரிக்க எவரால் முடியுமோ அவர் அக்காரியத்திற்காக மனித உருவெடுத்து கஷ்டங்களை ஏன் அநுபவிக்க வேண்டுமென்று நினைப்பது பொருந்தாததாகும்

தொடரும்.

ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

[ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் காரப்பங்காடு சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.]

(16-ம் பக்கத்தொடர்ச்சி.)

இனி பாகவதோச்சிஷ்டாசநம் நிரூபிக்கப்படும்.—

பாகவதோச்சிஷ்டாசநமாவது:— அவர்கள் அமுது செய்த இலைத்தளிகையில் தான் ப்ரஸாதஸ்வீகாரம் பண்ணுவது; அதுவுமன்றி பாகவதாள் அமுதுசெய்த பின்பு பாண்டஸ்தமான ப்ரஸாத சேஷத்தை ஸ்வீகரிப்பதுவுமாம்.

அவர்கள் அமுது செய்த இலைத்தளிகையில் ப்ரஸாதத்தை ஸ்வீகரிப்பது ஆசார்ய விஷயமென்றும், மற்ற பாகவதர்களுடைய உச்சிஷ்டாசனம் பாண்டஸ்த புக்தசேஷாசநமென்றும் சில ஸப்ர தாயஸ்தர்களுடைய அபிப்பிராயம்.

"அதற்கு ப்ரமாணம்:— "நாராயணைகநிஷ்டஸ்ய யாயா வேஷ்டா தத்ர்ச்சநம்" "நாராயணைகநிஷ்டஸ்ய யாயாசேஷ்டா தத்தர்ச்சநம்" என்றுதொடங்கி, "ததுச்சிஷ்டம் பாவநம்" "ததுச்சிஷ்டம் பாவநம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது; நாராயணைகநிஷ்டனுவான்:— காஷ்டாபந்நமான அநந்யோபாயத்வமென்ன, அநந்யபோக்யத்வாதி வ்யவஸாய மென்ன, அதற்கு அநுகுணமான ஆசாரமென்ன இவைகளாலே பூர்ணனன உத்தமாதிகாரி; இந்த உத்தமாதிகாரி ஸாமாந்யத்தைச் சொல்லுகிற இதுசாமாந்ய விசேஷ ந்யாயத்தாலே ஆசார்யவிஷயமே யாம்; "யேசோபகுர்வதே ஜ்ஞாநம் கிவ்யவ்யுத ஸம்ஶ்ரயம். விநோச்சிஷ்டாஶநம் கார்யாவ்ருத்திஃ தேஷ்வபி கௌரவாத்" "யேசோபகுர்வதேஜ்ஞாநம் கிமப்யச்யுத ஸம்ச்ரயம் விநோச்சிஷ்டாசநம் கார்யாவ்ருத்தி: தேஷ்வபி கௌரவாத்" என்று உச்சிஷ்டாசநம் ஆசார்ய வ்யதிரிக்த விஷயத்தில் கூடாதென்று விலக்கப்பட்டிருக்கையாலே ஆசார்யோச்சிஷ்டாசநமே கர்த்தவ்யமென்றேறப்படுகிறது; ஆதலால் ஆசார்ய வ்யதிரிக்த விஷயத்தில் பாண்டஸ்தப்ரஸாதசேஷாசநமே கொள்ளவேணும். அதுவுமின்றி "உச்சிஷ்டம் குரோரபி" "உச்சிஷ்டமகுரோரபி" என்று நிஷேதமிருப்பதாலும் இது ஸித்தம்." என்பர்.

இவ்விடத்தில் "நாராயணைகநிஷ்ட" சப்தம், சாமாந்ய விசேஷ ந்யாயத்தாலே ஆசார்ய மாத்ர மென்று சொல்லுவது அநுசிதம். பிதா, ஜ்யேஷ்டப்ராதா இவர்களுடைய உச்சிஷ்டாசநம் சாஸ்திர ஸம்மதமாகையாலே அவர்கள் ஆசார்ய வ்யதிரிக்தர்களாகையாலே அவர்கள் விஷயத்திலும் உச்சிஷ்டாசந நிஷேதப்ரஸங்கம் வரும்; ஆதலால் குருசப்தம் யாருடைய உச்சிஷ்டாசநம் சாஸ்த்ராநுமதமாயிருக்கிறதோ அவர்களெல்லோருக்குமே உபலக்ஷகம். ஆதலால் "நாராயணைகநிஷ்டஸ்ய" என்கிற சப்தமானது ஆசார்ய விஷயமாத்ர

மென்று ஸங்கோசிப்பது அங்யதாஸித்தும். ‘‘யெவொ்வகூவஞெதெ ஜ்ஞாநம் கிவெ்யவ்ூத ஸமுஞயம்’’ ‘‘யேசோப குர்வதே ஜ்ஞாநம் கிமப்யச்யுத ஸம்ச்ரயம்’’ என்கிற வசநம் நாராயணைகநிஷ்டனை பூர்ணாதிகாரி மாத்ர விஷயமன்று. ‘‘கிமபி’’ என்று ஸ்வல்பஜ்ஞாந உபகர்த்ருத்வம் சொல்லுகிறபடியால் மத்யமாதிகாரி விஷயமாகவும் கொள்ளவேணும். உச்சிஷ்டமென்பது அவர்களமுது செய்த இலைத் தளிகையிலுள்ள ப்ரஸாதத்தைத்தான் முக்யமாகச் சொல்லும். பாண்டஸ்த சேஷத்தைச் சொல்வது அஸ்வரஸம்.

இப்படியே ஆசார்யதுல்யர்களான பாகவதர்களுடைய உச்சிஷ்டாசநம் சேஷத்வஜ்ஞாந வர்த்தகமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியே தொண்டரடிப்பொடியாழ்வாரும், ‘‘போனகம் செய்த சேடம் தருவரேற்புநித மன்றே’’ என்றருளிச் செய்தார். ‘‘ஆதலால் ‘‘நாராயணைகநிஷ்டஸ்ய’’ என்று சொல்லப்படுகிற அதிகாரிகள் ஆசார்யதுல்யர்களான ஜ்ஞானபூர்த்தியுள்ள பாகவதர்களை விலக்காதென்றே கொள்ளவேணும்.

இனி, பஞ்சஸம்ஸ்கார விஷயத்தில், தாபஸம்ஸ்காரம், ஹோம பூர்வகமாகவே செய்யவேணுமென்று சொல்லப்படுகிறது; அப்படி ஹோமமில்லாமல் செய்வதும் சில ஸம்ப்ரதாயங்களில ஏற்பட்டிருக்கிறது. அதற்கு ப்ரமாணம் — பாரத்வாஜஸம்ஹிதையில், ‘‘ஊீவாஉ ஸம்ஸ்காராः வாரஉெகோம்தஹெதவः। ஸவஞு ஹஸிரெவ ஊவஞ்ஃ நாஸ்ிகஒஞதிகெவந’’ அமீபரமஸம்ஸ்காரா: பாரமைகாந்த்ய ஹேதவ:, ஸர்வத்ர ஹரிரேவ அர்ச்ச்ய: நாக்நிகர்மேதிகேசந’’ என்று சொல்லப்பட்டிருக்கிறது. கீழ்தாபாதிஸம்ஸ்காரங்கள் ஹோமபூர்வகமாகவே செய்யவேண்டுமென்று சொல்லிவிட்டு, அப்படி அக்நி கர்மாவான ஹோமம் வேண்டுவதில்லை யென்று சிலர் சொல்லுவர்கள் என்றிருப்பதாலும், ‘‘வதிவ்ரதாநிமித்தம் ஹி வலயாதி விஹூஷணம்’’ ‘‘பதிவ்ருதா நிமித்தம்ஹி வலயாதிவிபூஷணம்’’ என்னுமாப்போல தாபாதிஸம்ஸ்காரங்கள் பகவத் தாஸ்யசிஹ்நங்களாகையாலும், ப்ராய:சித்தரூபங்களல்லாமையாலும், ஹோமம் அநபேக்ஷிதம்.

இனி யதிகளுக்கு மாடாதிபத்யகூடும் என்னும் விஷயம்:—
"𑌮𑌾𑌠𑌾𑌧𑌿𑌪𑌤𑍍𑌯𑌂 𑌯𑌤𑌿𑌃 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌭𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑌯𑍇"
"மாடாதிபத்யம் யதி: குர்யாத் விஷ்ணுகார்யாபி வ்ருத்தயே" என்று தொடங்கி விஷ்ணு கைங்கர்யத்தின் விர்த்தியின் பொருட்டும் ஸித்தாந்த ஸ்தாபநத்தின் பொருட்டும் மாடாதிபத்தியத்தைச் செய்ய வேண்டுமென்று சொல்லியிருப்பதால் விசேஷ தர்மங்களான கைங்கர்ய ப்ரப்ருதிகளுக்கு அவிரோதேந ஸாமாந்யதர்மங்கள் அநுஷ்டேயங்களாகையாலே விசேஷ தர்மாநுஷ்டான காலத்தில் யதிகளுக்கு விதிக்கப்பட்டிருக்கிற ஸாமாந்யதர்மத்துக்கு லோபமிருந்தாலும் ப்ரத்யவாயமில்லை என்று கீழ் நிருபிக்கப்பட்டிருக்கிறது. யத்யந்நாதி நிஷேத விஷயமும் அவைஷ்ணவ யத்யந்நாதிகளில் சரிதார்த்தமாம். தத்ஸ்வீகாரம் மதாந்தரஸ்தர்களிடத்திலுமிருப்பதால் இந்த விஷயத்தில் நிரூபணத்தை நிறுத்தி விட்டேன்.

பகவத் ஸந்நிதியில் பாகவதஸமாகமம் நேர்ந்தால் பரஸ்பரம் வந்தநம் கூடும். இதரவந்தன நிஷேதம் பரஸ்பர வ்யதிரிக்த விஷயம். இந்த விஷயம் சாண்டில்யஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

"𑌭𑌗𑌵𑌨𑍍𑌮𑌨𑍍𑌦𑌿𑌰𑍇 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌨𑍍 𑌪𑍂𑌜𑍍𑌯𑌾𑌨𑌪𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃। 𑌵𑌿𑌨𑌾𑌭𑌾𑌗𑌵𑌤𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌪𑍍𑌰𑌣𑌾𑌮𑌾𑌦𑍍𑌯𑍈𑌰𑍍𑌨𑌚𑌾𑌰𑍍𑌚𑌯𑍇𑌤𑍍" "பகவந்மந்திரே வ்ருத்தாந் பூஜ்யாநபி விசேஷத: விநாபாகவதச்ரேஷ்டம் ப்ரணமாத்யை:நசார்ச்சயேத்" அப்படியே அர்ச்சாரூபிகளான ஆசார்யர்களுடைய வந்தனமும் பகவத்ஸந்நிதிகளில் கூடும். பாரத்வாஜ ஸ்மிருதியில், "𑌪𑌰𑌿𑌵𑌾𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌸𑍇𑌵𑍇𑌤 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌪𑌰𑌮𑌯𑌾 𑌹𑌰𑍇𑌃। 𑌤𑌤𑍍𑌤𑌦𑌰𑍍𑌚𑌾𑌗𑌤𑌾𑌨𑍍 𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑍍 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃" "பரிவாராம்:ச் ஸேவேத பக்த்யாபரமயா ஹரே: தத்ததர்ச்சாகதாந் பக்தாந் ஆசார்யாம்:ச விசேஷத:" என்று பகவத்ஸந்நிதியில், அர்ச்சாரூபிகளான ஆசார்யர்களுடைய நமஸ்காரம் விஹிதம்.

இந்த விஷயத்தில் பூர்வாசார்யர்கள் அநுஷ்டித்ததாக ஒரு ஐதிஹ்ய மேற்பட்டிருக்கிறது. அதாவது (திருவிருத்தவ்யாக்யானத்தில்) ஸ்ரீபாஷ்யகாரர் பகவத் ஸந்நிதியில் எழுந்தருளி யிருக்கும்போது ஸ்ரீபாஷ்யகாரரை அநேக ஸ்ரீவைஷ்ணவர்கள் தெண்டன்

ஸமர்ப்பிக்க, அப்போது ஒரு வித்வான் பகவத் ஸந்நிதியில் இதர வந்தனம் கூடாதென்று சாஸ்திரம் சொல்லியிருக்க இப்படி ப்ராஜ்ஞர்களாயிருப்பவர்கள் ஸ்வாமியைத் தண்டன் ஸமர்ப்பிக்க அதை ஸ்வாமி அங்கிகரித்திருப்பது கூடுமோ என்று கேட்க, அதற்கு ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்த ப்ரகாரமாவது:— "ஒரு ராஜாவினுடைய ஸமீபத்தில் அவன் பார்த்திருக்கச்செய்தே அவனுடைய பாதுகையை ஒருவன் தன்னுடைய ஸிரஸாலே வஹித்துக்கொண்டு அந்தப் பாதுகைகளுக்கு நாநாவித பூஜைகளையும் செய்தால் அது ராஜாவினுடைய அநுக்கிரஹத்துக்குக் காரணமாமே யல்லாது நிக்கிரஹத்துக்குக் காரணமாக மாட்டாது; அதுபோலவே எம்பெருமானுடைய பாதுகா ஸ்தாநாபந்நர்களான பாகவதர்களைத் தண்டன் ஸமர்ப்பித்தால் அது எம்பெருமானுடைய விசேஷாநுக்ரஹத்துக்குக் காரணமாமே யல்லது நிக்ரஹத்துக்குக் காரணமாக மாட்டாது; வந்தன நிஷேதமும் பாகவதவ்யதிரிக்த விஷயம்" என்றார் என்பதாம்.

ஆக இப்படி ப்ரமாணங்களாலும் உபபத்திகளாலும் ஆசார்யாநுஷ்டான ப்ரகாசகமான ஐதிஹ்யத்தாலும் பகவத் ஸந்நிதியில் பாகவதவந்தனம் கூடுமென்றாயிற்று. இப்படி ப்ரமாணஸித்தமாயுள்ள அநுஷ்டானங்களைச் சிலர், "விதமெரெதிஹ்ய ஸஹஸ்ரவண்ணெ" "விதைதிஹ்ய ஸஹஸ்ரவர்ணநே" (என்பது போன்ற வாக்கியங்களால்) "பொய்யான ஐதிஹ்யங்களைச் சொல்லிக்கொண்டு சில கலர்கள் லோகத்தை வஞ்சிக்கிறார்கள்" என்று நிந்திக்கிறார்கள். தங்களுடைய ஸம்ப்ரதாயங்களிலும் அப்படியே அநேக ஐதிஹ்யங்களைத் தாங்கள் சொல்லிக்கொண்டிருப்பதை அவர்கள் நிந்திருந்தால் நிந்திக்கமாட்டார்கள். அவற்றையெல்லாம் இங்கு விஸ்தரித்து நிரூபிப்பதில் விஸ்தாரபயத்தால் நிறுத்தி விட்டேன்.

தொடரும்.

65

ஸ்ரீ:

நசிகேதோபாக்யானம்.

[மதுரை ஸம்ஸ்கிருத காலேஜ் ந்யாய வேதாந்த வித்வான்
ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸகோபாலாசார்ய ஸ்வாமி எழுதுவது.]

(48-ம் பக்கத் தொடர்ச்சி.)

வாஜச்ரவசு தம்முடைய சிஷ்யராகிய சுமுகரைப்பார்த்து வாஸிஷ்டர் முதலானோரை யழைத்துவரும்படி நியமித்தார். அவரும் அங்ஙனமேசென்று அழைத்துவந்தனர். அப்பொழுது வாஜச்ரவசு வாஸிஷ்டரை நோக்கித் தேவரீரது சிறந்த உதவியால் இந்த யாகத்தைப்பூர்த்திசெய்தேன். மேலும் தேவரீருடைய துணைவர்களாகிய மற்றவர்களும் இந்த யாகத்திற்குத் துணையாகவிருந்து உதவி புரிந்தார்களாதலால் அவர்கட்கும் யான் நன்றிபாராட்டக் கடமைப் பட்டவனாகிறேன்.

வாஸிஷ்டர்—இந்தயாகம் எங்களது உதவியால் பூர்த்தியுற்றதென்று நீர் எங்களைத் துதி செய்யவேண்டாம். இது, உம்முடைய கீர்த்தி ப்ரபாவத்தாலே பூர்த்தியுற்றதேயன்றி வேறில்லை.

வாஜ—இந்த யாகம் பூர்த்தியாவதற்குத் தேவரீர்களுடைய பூர்ணமான மனத்தின் திருப்தியும் காரணமாகும். இஃதொருபுறமிருக்க; இந்த யாகத்திற்கு ஸர்வஸ்வதக்ஷிணாகம் (எல்லாச் சொத்துக்களையும் தக்ஷிணையாகக்கொடுப்பது) என்று மற்றொரு பெயருமுண்டல்லவா! ஆதலால் தேவரீர்களை உத்தேசித்துச் சாஸ்திரத்திற் சொல்லியபடி சில தக்ஷிணைகளைக் கொடுப்பதாக உத்தேசிக்கிறேன். அவற்றைத் திருப்தியுடன் அங்கீகரிக்க வேண்டுகிறேன்.

வாஸிஷ்டர்முதலானோர்—நாங்கள் உமக்கு எவ்விதமான உதவிகளையுஞ் செய்தற்குக் கடமைப் பட்டவர்களாக விருக்கின்றோமாதலால் நீவிர் கொடுப்பதைத்திருப்தியுடன் ஏற்றுக்கொள்வதற்கு ஸித்தமாக விருக்கிறோம்.

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY, THIRUVANMIYUR, MADRAS-41

வாஜ—(வாஸிஷ்டரைப் பார்த்து) ஸ்வாமி! தேவரீருக்குப் புற்கள் நிறைந்திருக்கின்ற அவ்விடத்தில் நின்று கொண்டிருக்கும் நூறு பசுக்களைத் தக்ஷிணையாகக் கொடுக்க உத்தேசிக்கிறேன். அப்பசுக்களைத் திருப்தியோடு அங்கீகரிக்கவேண்டும்.

வாஸி—நீர் உகப்புடனளித்த இப்பசுக்களை யான் திருப்தியுடன் அங்கீகரித்தேன்.

[யாகத்தில் பிர்ம்மாவாயிருந்த வாஸிஷ்டருக்குத் தன் தந்தையாராகிய வாஜச்ரவசு தானஞ் செய்ததைக் குறித்து நசிகேதஸ்ஸு 'அந்தோ! தண்ணீர் அருந்துதற்கு முடியாத மிகக் கிழத்தன்மையுடைய இப்பசுக்களைத் தக்ஷிணையாகக் கொடுக்கின்றனரே; இவற்றைப் பெற்று வாஸிஷ்டர் யாது பயனை யடையப்போகின்றார்' என்று வருந்தி நின்றான்.]

வாஜ—(செவனரை நோக்கி) அத்வர்யோ! உமக்கு இங்கு நின்று கொண்டிருக்கும் நூறுபசுக்களைத் தக்ஷிணையாகக் கொடுத்தேன். தேவரீரால் அடைந்த உதவிக்கு இவை சமமாகாதிருந்தாலும் இவற்றை அன்புடன் அங்கீகரிக்குமாறு வேண்டுகிறேன்.

செவனர்—நீர் விரும்பியபடி நான். இப்பசுக்களைப் பிரியத்துடன் அங்கீகரித்தேன்.

[நசிகேதஸ், 'நம் தகப்பனார் வாஸிஷ்டருக்குப் பயனற்ற தானத்தைக் கொடுத்தது மல்லாமல் யாகத்தில் அத்வர்யுவாக விருந்த இந்தச் செவனருக்கும் புற்களை மெல்லுதற்கும் சக்தி யில்லாத இப்பசுக்களைத் தக்ஷிணையாகக் கொடுத்தனரே. இங்ஙனஞ் செய்வதால் யாகபலம் எவ்வாறு கிடைக்கும்?' என்று கவலையுற்றான்.]

வாஜ—(கஸ்யபரைப் பார்த்து) ஹோதாவே! தேவரீருக்கும் இந்த நூறு பசுக்களைத் தக்ஷிணையாகக் கொடுக்கிறேன்; திருவுள்ள முகந்தருள வேண்டும்.

கஸ்ய—நீர் உகந்தளித்தவற்றை உத்ஸாகத்தோடு ஏற்றுக்கொண்டேன்.

[நசிகேதஸ், 'நம் தந்தையார் வசிஷ்டருக்கும், கௌதமருக்கும் பயனற்ற பசுக்களைக் கொடுத்தது போலக் கஸ்யபருக்கும் முன்னிலும் கிழத்தனமுள்ள பசுக்களைக் கொடுக்கின்றனரே; இப்பசுக்களுக்கோ பாலைத்தரும் யோக்யதையுமில்லை; அதனால் இவற்றைக்கொண்டு வேறு பசுக்களை விர்த்தி செய்து கொள்ளுதற்கும் இயலாதன்றோ! கஸ்யபர் இவற்றைப் பெற்றென்செய்யப் போகின்றார்; நம் தகப்பனாரும் யாது பயனைப் பெறப்போகின்றார்; நம்மையாவது தக்ஷிணையாகக் கொடுத்து இந்த யாகத்தின் பயனை யுடையும்படி செய்யவேண்டும்' என்று கருதித் தன்பிதாவை நோக்கித் தந்தாய்! 'என்னை யாருக்குத் தக்ஷிணையாகக் கொடுக்கப் போகிறீர்கள்' என்று கேட்டான்.]

வாஜ.—'இச்சிறுவனாகிய நம் குமாரன் சிறுபிள்ளைக்குரிய தன்மையைக் காட்டி விட்டான்; இனி இவன் கேட்ட கேள்வியையும் வேறு விஷயத்தினால் மறைத்து விடவேண்டும்' என்று தம்மனத்திற் கருதிக்கொண்டு வாஸிஷ்டர் முதலானோரை நோக்கிப் பரமோபகாரிகளாகிய உங்களை இவ்வளவு காலம் இங்கு தாமதிக்கும்படி செய்த என் குற்றத்தை மன்னித்தருள்வதோடு கார்யாந்தரங்களில் முயலுமாறு அடியேனுக்கு அநுமதியுந்தந்தருளவேண்டுமென வேண்டி நின்றார்.

[நசிகேதஸ் 'நம் தகப்பனார் நாம் கேட்ட கேள்வியைப் பொருட்படுத்தாமல் பராமுகமாக வாஸிஷ்டர் முதலானோரை நோக்கி உரையாடுகின்றனரே; நாம் கேட்ட கேள்வி அவரது செவிக்குப் புலனாகவில்லையோ? அப்படியானால் மறுமுறையுங் கேட்போம்' என்று வாஜச்ரவசுவை நோக்கி என்னருமைப் பிதாவே! 'என்னை எவருக்குத் தக்ஷிணையாகக் கொடுக்கப் போகிறீர்' என்றான். அப்பொழுது வாஜச்ரவசு யாதொரு மறுமொழியும் பகராது சும்மாவிருந்தார்.

நசி— பிதாவே! யான்கேட்ட கேள்விக்கு யாதொரு பதிலுமளிக்காதிருக்கின்றீரே; என்னை யாருக்குக் கொடுக்கப்போகின்றீர்?

வாஜ—(இவன் சிறுவனல்லன்; மூர்க்கனாக விருக்கின்றான்; இவனை இப்பொழுது தக்கபடி சிக்ஷிக்காவிடில் நம்மனம் சமாதான

மாகமாட்டாது' என்று கோபமுற்று நசிகேதஸ்ஸை நோக்கி) அடே! நீ துஷ்டனாக விருக்கின்றாய்; பலமுறையும் 'என்னை யாருக்குக் கொடுக்கப் போகின்றாய்' என்று என்னை உபத்திரவப்படுத்தினாய் ஆதலால் உன்னை யமதர்ம ராஜனுக்குத் தக்ஷிணையாகக் கொடுத்தேன்.

நசி— நீர் நியமித்தபடியே யமனுக்கே யான் தக்ஷிணைப்பொருளாகிறேன். [நான் இவ்வளவுகாலமாகத் தகப்பனாரின் சொல்லைக் கடந்து ஒன்றுஞ் சொல்லவில்லை; புத்திரனாக விருந்த போதிலும் சிஷ்யர்கள் செய்யத்தக்க கடமையெல்லாம் தவறாது செய்து வந்தேன்; அவ்வாறிருக்க இப்பொழுது கடுஞ்சினங் கொண்டு இவ்வாறு கூறினரே; அதற்கு நான் என்ன அபராதஞ் செய்தேன்? என்னை அவர் இதுவரை அதமர்களான சிஷ்ய கோஷ்டிகளுள் ஒருவனாகச் சேர்க்கவில்லையே; அவர் சிறந்த தபவிசேஷத்தை யுடையவராதலால் அவருடைய வாக்கும் வீணாகாது; யமதர்மனுடைய வீட்டையடைந்து அவனுக்குச் செய்யத்தக்க கார்யமின்னதென்றும் புலப்படவில்லை; இச் சரீரத்துடன் யமன் பக்கலடைவது அஸாத்யமான காரியம்; இச்சரீரத்தை விட்டு மற்றோர் சரீரத்துடன் செல்வதிலும் மகிழ்ச்சி யுடையவனாகவே யிருக்கிறேன்; பயிர்கள் ஜீர்ணமடைவதும் மறுபடியுமுண்டாவதும் அவற்றிற்கு எவ்வாறு இயற்கையோ அதுபோலவும், மனிதன் கந்தல் வஸ்திரத்தைக் களைந்து புதிய வுடையைத் தரித்துக் கொள்ளுதல் போலவும் ஆத்மா ஒருடலை நீத்து விட்டு மறுசரீரத்தைப் பற்றுவதும் அதற்கியல்பேயாம்; இவ்வுண்மையை யறியாதவர்களன்றோ துக்கத்திற்குள்ளாவார்கள்; இது நிற்க, என் தந்தையாருக்கு இப்பொழுது ஒருவாறு கோபந்தணிந்திருக்கக்கூடும் அவரை யணுகி 'நான் யமதர்மனுக்குச் செய்யத்தக்கதென்ன?' என்று வினவித் தெரிந்துகொண்டு செல்வதே உத்தமமான கார்யமாகும்.' என்று நசிகேதஸ் தனக்குள் சிந்தித்துக் கொண்டான்.]

தொடரும்.

64

ஸ்ரீ:

ஸ்ரீ சரண்யாபிமத விஷ்ணுசித்த ராமாநுஜ ஸபையின்

15, 16-ம் வருஷோத்ஸவம்.

இச் சபையின் 15, 16-ம் வருஷோத்ஸவம் திருவையாற்று ஸம்ஸ்க்ருத காலேஜ் பிரின்ஸிபல் ஸ்ரீ. உ. வே. S. வேதாந்தமையங்கார் ஸ்வாமியின் (M. A; L. T.) அக்ராஸநாதிபத்தியத்தில் நாளது விபவஹு மாசிமீ 26, 27உ (1929-ம்ஹு மார்ச்சுமீ 9, 10உ)களில் இனிது நடைபெற்றது. முதல்தினத்தில் ஸபையோர்கள்கூடி ஸபைக் கட்டிடத்திலிருந்து அக்ராஸநாதிபதியவர்களை ஸ்ரீ கூடலழகப் பெருமாள் ஸந்நிதியை ப்ரதக்ஷிணமாக அழைத்துக்கொண்டு ஸபையின் வருஷோத்ஸவத்திற்காக ஸித்தப்படுத்தப்பெற்ற ஸ்ரீ மதனகோபாலப்பெருமாள் சந்நிதிக்கு வந்து சேர்ந்தார்கள். அதன்பிறகு மங்கள வாழ்த்து திவ்யப்ரபந்த கானஸபையார்களால் இனிது பாடப்பெற்ற பின் செந்தமிழ் உபபத்திராதிபர் ஸ்ரீ. உ. வே. திரு. கி. இராமாநுஜையங்கார் ஸ்வாமி அக்ராஸநாதிபதியவர்களை வரவேற்க அவர் ஆஸநத்திலமர்ந்து 'இந்த மதுரைமாநகரம் பண்டு பெரியாழ்வாரால் பரதத்வ நிர்ணயஞ் செய்யப்பெற்ற சிறந்த க்ஷேத்திரமாகும்; இதில் அந்தப் பெரியாழ்வாரின் பெயரால் இச்சபை பமையப்பெற்றது மிகப்பொருத்தமுடையதே' என்று பல விஷயங்களை முன்னுரையாகக் கூறினார்கள்,

அதன்பிறகு ப்ரஹ்லாதாழ்வான் என்ற விஷயத்தைக்குறித்து ஸ்ரீ. உ. வே. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்ஸ்வாமி (B. A; B. L. ஹைகோர்ட் வக்கீல்) கம்பராமாயணம் இரணியன்வதைப் படலத்திலிருந்து சில மேற்கோளெடுத்துதகரித்து சுருதி யுக்தி யநுபவத்திற்கு நன்கு பொருந்துமாறு உபந்யஸித்து முடித்தார்.

அதன்பின்னர் ஸ்ரீரங்கம் தென்னுசார்ய ஸம்ரக்ஷணஸபா வித்வானுக எழுந்தருளியிருக்கிற ஸ்ரீ. உ. வே. நியாயவேதாந்த வித்வான்

ரங்கஸ்வாமி ஐயங்கார்ஸ்வாமி சரணாகதி வைபவம் என்பதைக் குறித்து பூர்வபக்ஷ ஸமாதானங்களுடன் பல வுதாரணங்களெடுத்துக்காட்டி விரிவாக உபந்யஸித்து முடித்தார். பின்னர் அக்ராஸநாதிபதியவர்கள் முன் குறிப்பிடப்பெற்ற இரண்டு உபந்யாஸகர்கள் உரைத்த விஷயங்களின் ஸாரத்தை நன்றாக வெடுத்து விளக்கி முடிவுரை கூறினர்.

10—3—29 ஞாயிற்றுக்கிழமை காலை $8\frac{1}{2}$-மணிமுதல் ஸ்ரீ. உ. வே வித்யாரத்னகர பண்டிதவர V. R. நரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி ஹரிஸமய ஸாதன பலங்கள் என்ற விஷயத்தைக்குறித்து உபநிஷத் பாஷ்ய வாக்யங்களிலிருந்து சில சமயவாதிகளின் கொள்கையை எடுத்துக்காட்டி இந்த ஹரிஸமயத்தின் பெருமையை நிரூபித்து அதன் சாதன பலங்களையும் விரிவாக உபந்யஸித்து முடித்தார். அதன்பின்னர் அக்ராஸநாதிபதியவர்கள் உபந்யாஸகருரைத்த விஷயங்களைச் சுருக்கி யுரைத்து முடிவுரை கூறினர்.

மேலும் அன்று தினம் மாலை 4-மணிக்கு ஸபை கூடியது. அக்காலத்து சேரன்குளம் ஸ்ரீ.உ.வே. வித்வான் வேங்கடாசார்யஸ்வாமி த்ரௌபதி சரணாகதி என்ற விஷயத்தைக்குறித்து மஹாபாரதத்திலிருந்து பலமேற் கோளெடுத் துரைத்து ஆராய்ச்சி முறையில் விரிவாக உபந்யஸித்து முடித்தார். பின்னர் ஸ்ரீ உ. வே. நியாய வேதாந்த வித்வான் ரங்கஸ்வாமி ஐயங்கார்ஸ்வாமி ப்ரஹ்மஸூத்ர தாத்பர்யம் என்ற விஷயத்தைக்குறித்து ப்ரஹ்ம ஸூத்ரம் விசிஷ்டாத்வைத பாரம்யத்தையே நன்றாக நிரூபிக்கிறதென்பதை ஸூத்ரங்களாலும் ஸூத்ர பாஷ்யங்களாலும் யாவருக்கும் புலனாமாறு எடுத்துக்காட்டி மிகவும் தெளிவாக உபந்யஸித்தார். பின்னர் வித்யாரத்னகர பண்டிதவர ஸ்ரீ. உ. வே. நரஸிம்ஹாசார்யஸ்வாமி ஸ்திரீ தர்மம் என்பதைக் குறித்து உபநிஷத் முதலிய பல ப்ரமாணங்களால் பெண்ணுக்கும் பேதைக்கும் விளங்குமாறு எடுத்துக்காட்டி உபந்யஸித்தார். அதன் பிறகு அக்ராஸநாதிபதியவர்கள் உபந்யஸிக்கப்பட்ட விஷயங்களின் ஸாராம்சங்களையும் அவற்றிற்கிசைந்த வேறு பல நுட்பங்களையும் ஸபையோர்கள் மகிழுமாறு முடிவுரை கூறி முடித்தார். பிறகு ஸ்ரீ. உ. வே. N R. கிருஷ்ண

ஸ்வாமி ஐயங்கார்ஸ்வாமி (B. A; B. L. ஹைகோர்ட் வக்கீல்) ஸபையின் சார்பாக அக்ராஸநாதிபதி யவர்கட்கும் உபந்யாஸகருக்கும், ஸபையோர்கட்கும் வந்தனோபசாரங் கூறிய பின்னர் ஸ்ரீ மதன கோபாலப்பெருமாள் ஸந்நிதியில் கோஷ்டி விநியோகம் நடைபெற்று ஸபை பூர்த்தி யுற்றது.

ஸ்ரீ:

கோயில் மார்கழித்திருநாளின்குறைபாடு.

பரிபூரணாநுபவம் நடவாநிற்கிற திரிபாத் விபூதியைக் காட்டியும் 'நல்குரவும் செல்வும்' ஒரு நிலைநில்லா லீலாவிபூதியைக்காட்டியும் தனியே ஓர் விபூதி என்னலாம்படி அதிவிலக்ஷணமாய் இரண்டாற்றின் நடுவே விளங்கும் திருவரங்கம் பெரியகோயிலின் சிறப்பு யாவராலும் சொல்லும் தரத்ததன்று. அங்கெழுந்தருளியிருக்கும் பெரியபெருமாளின் பெருமையை ஆயிரம் பணாமுடிகளையுடைய அநந்தன் அணையாகவிருந்தும் அளவிட அசக்தனென்றால் அஜ்ஞர்களால் அளவிடப்போமோ? அவனை காட்டக்கண்ட ஆழ்வார்களும் "அம்மானாழிப்பிரான் அவனெவ்விடத்தான் யானார்?" என்று பிற்காலிக்கும் பீடுடைய பெருமான் பெருமையைப் பிறர் பேசத் துணிவது பிழையாகுமன்றோ! லோகரக்ஷணார்த்தமாக ஸர்வேசுவரன் அவதரித்த விபவாவதாரங்கட்கும் அர்ச்சாவதாரத்திற்கும் எவ்வளவு வாசியுண்டோ அதுபோலக் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கிற மற்ற அர்ச்சாவதார எம்பெருமான்கட்கும் இந்த திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கிற எம்பெருமானுக்கும் நெடுவாசியுண்டு. இது நிற்க, ஆழ்வார் பதின்மர்களாலும் மங்களாசாசனம் செய்யப்பெற்ற ஏற்றம் இந்தத் திவ்யதேசத் தெய்வப்பெருமானுக்கே யுளது. பூர்வாசார்யர்கள் பலரும் இத்திவ்யதேசத்தையே தமக் குறைவிடமாகக் கொண்டிருந்தார்கள். பண்டைக்காலந்தொட்டு இன்றளவும் இத்திவ்யதேசத்தில் ஒவ்வொரு மாதமும் தவறாது உத்ஸவங்கள் நடைபெற்று வருகின்றன. அவற்றுள் வைதிக சமூகங்

களும் லௌகிக சமூகங்களும் ஒருங்குகூடி மிகவும் கொண்டாட்டமாக அநுபவிக்கக்கூடிய திருநாள் மார்கழித்திருநாளாகும். இத் திருவிழாவின் பெருமை சொலற்கரிதாயினும் அடியே னறிந்தவளவில் ஒருவகையான் ஈண்டுச் சுருக்கி எழுதத் துணிகிறேன். அது வருமாறு:—

நம்மாழ்வாரது வரலாற்றையும் அவரது பெருமையையும் அறியாதார் நம் சமூகத்தில் ஒருவருமிலர். இவரே ப்ரபந்நஜன கூடஸ்தராயும் ஆழ்வார்கட்கு அங்கியாயும் ஞானிகளில் தலைசிறந்தவராயும் விளங்குகின்றவரென்றும் யாவருமறிவர். இவர் திருவாய் மலர்ந்தருளிய திவ்ய ப்ரபந்தங்கள் பரப்ரஹ்மஸ்வரூப இயல்புகளை மிகவும் தெளிவாகக்காட்டு மியல்பினையுடையன. இத்திவ்யப்ரபந்தத்தைப் பெருமாள் திருச்செவிசாத்தும்படி உத்ஸவங்கொண்டாட வேண்டுமென்று திருமங்கைமன்னன் திருவுள்ளம்பற்றித் திருவத்யயனோத்ஸவத்தைத் தொடங்கினார். இப்பொழுது இராப்பத்தென்று வழங்கப்படும் உத்ஸவம் இதுவே யாகும். இந்த உத்ஸவம் திருமாமணி மண்டபத்தில் மிகவும் சம்ப்ரமமாக இப்பொழுதும் நடைபெறுகிறது.

பின்னர் உடையவர் ஏனைய ஆழ்வார்கள் திவ்ய ப்ரபந்தங்களையும் பெருமாள் திருச்செவி சாத்தும்படி செய்யவேண்டுமென்று திருவுள்ளம்பற்றி அரையர் வாயிலாக மற்ற திவ்ய ப்ரபந்தங்களையும் சேவிக்கும்படி செய்தார். இப்பொழுது பகல்பத்தென்று வழங்கப்பெறும் உத்ஸவம் இதுவே யாகும்.

ஏனைய திவ்யதேசங்களில் இத்திருவாய்மொழித் திருநாள் நடைபெற்றாலும் இத்திவ்யதேசத்தில் நடைபெறுவது போன்ற சிறப்பு அவற்றிற்குண்டாக மாட்டா. இது நிற்க, இந்த உத்ஸவத்தில் அருளிச்செயல்களை அரையர்களே தாளங்கொண்டு பாடி அரங்கனை உகப்பித்து வருகிறதென்ற முறை இத்திவ்யதேசமொன்றற்கே யுளது. மற்றத் திவ்யதேசங்களில் அரையர்களே ஸேவிக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை. இதனால் இவ்வுத்ஸவத்தில் அரையர் பலர் குழுமியிருந்து அருளிச்செயலை ஸேவிக்கவேண்டுமென்ற நியமமுண்டென்பது பெறப்படுகிறது.

இப்பொழுது இந்த ஐதிஹ்ய உத்ஸவத்திற்கு லோபம் வந்து விடுமோ என்ற அதிசங்கையுண்டாகிறது. இவ்வுத்ஸவத்தில் அரையர்கள் ஆறுதிருநாமங்கள் ஏககாலத்தில் ஒருங்குகூடி அருளிச்செயலைச்சேவித்ததை அடியேன் நேரில் கண்டுகளித்ததுண்டு. பின்பு அவர்கள் ஐவரானார்கள். சமீபகாலத்தில் நால்வர்மாத்திரம் ஸேவித்து வந்தார்கள். இவ்வாண்டில் பகல்பத்தில் மூவர்மாத்திரம் ஸேவித்தார்கள். இராப்பத்திலோ அவர்கள் இருவராய் வந்து நின்றார்கள். இந்நிலைகண்ட பலபெரியோர்களின் திருவுள்ளம் புண்பட்டது. இவ்வுத்ஸவம் இங்ஙனமாகுமாகில் திருவத்யயநோத்ஸவம் என்ற பெயருமொழிந்துவிடுமன்றோ! இதுவும் காலத்தின் கொடுமையோ? அந்தோ! பரிதாபம்.

அரங்கனது குறைவுநிறைவுகளைத் தம்மதாகப் பாவிக்கும் பெருமையுடையவரும் கியாதிலாபங்களற்றவரும் உடல்பொருளாவிகளை எம்பெருமானுக்கே அர்ப்பணஞ்செய்தவரும் பரமதார்மிகர்களுமாகிய தர்மகர்த்தாக்கள் இக்குறைவுகளைக் கவனித்து நீக்குதற்குக் கடமைப்பட்டவராவார்கள்.

இத்திருவரங்கத்தரையர்களில் ஒருவர் தமக்குக்கிடைத்திருக்கும் எம்பெருமானது கைங்கர்யத்தின் சீர்மையையும், அருமையையும் ஆராயாமல் தேசாந்தரம் சென்று பொருளீட்டமுயன்றுகொண்டிருக்கின்றார். அன்னவர்க்கு அவரது கைங்கர்யத்தின் பெருமையை எடுத்துரைத்து அவரை இத்திவ்யதேசத்திலே வசிக்கும்படி செய்வதோடு சந்ததியில்லாத அரையரைப் புத்ரஸ்வீகாரம் செய்துகொள்ளுமபடியும் செய்வித்தால் இககுறையகன்று "ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாமபி வர்த்ததாம்" என்ற மொழியும் பொருளுடையதாய்ப் பொலிவுறுமென்பதற்கையமில்லை. இவ்வாறு தர்மகர்த்தாக்கள் உத்யோகிக்குமாறு அவர்களைப்பன்முறையும் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்

T. D. இராமஸ்வாமி ராமாநுஜதாஸன்,

திருப்புறம்பயம்,

திருக்குடந்தை.

ஸ்ரீ:

பாரதீய பூர்வ சிகா ஸ்ரீவைஷ்ணவ ஸபையின் இரண்டாம் வருஷோத்ஸவத்தில் அக்ராஸநரின் பிரஸங்கம்.

இவ்வாண்டில் இச்சபையின் வருஷோத்ஸவம் தேவகோட்டையில் 30—3—29உயன்று இனிது நடைபெற்றது. அக்காலத்து இராமநாதபுரம் வக்கீல் ஸ்ரீ. உ. வே. T. இராமாநுஜையங்கார் ஸ்வாமி அக்ராஸநம் வஹித்தார்கள். அதுபொழுது அவர்கள் செய்த நீண்ட உபந்யாஸப் பத்திரிகை கிடைக்கப்பெற்றோம். அதில் பூர்வ சிகா ஸ்ரீவைஷ்ணவர்கள் முன்னேற்றமடைதற்குரிய பலதுறைகள் குறிப்பிடப்பெற்றுள்ளன. அவை அவர்கட்கேயன்றிப் பிறர்க்கும் பயன்படத்தக்கனவா யிருக்கின்றமையால் அதனைச்சுருக்கி ஈண்டெழுதப்படுகிறது அதுவருமாறு:—

மதுரகவியாழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், செல்வநம்பி, திருக்கோஷ்டியூர்நம்பி, திருமாலையாண்டான், பெரியவாச்சான்பிள்ளை, நைஞராச்சான்பிள்ளை, திருவாய்மொழிப்பிள்ளை முதலான ஆழ்வாராசார்யர்களும் இராஜதந்திரத்தில வல்லுநரான சாணக்யர் முதலானோர்களும் இக்குலத்தில் தோன்றியவராவார்கள். அக்காலத்தில் இக்குலத்தினரில் பலர் லௌகிகத்திற் சதுரர்களாயும் விளங்கினர். இஃதொருபுறமிருக்க எம்பெருமான் உகந்தருளிய நிலங்களை இக்குலத்தினர் தமக்குப் பரமப்ராப்யமான உறைவிடமாகக்கொண்டு பகவத் கைங்கர்யம் பலவற்றையும் நிர்வஹித்து வந்தார்கள். அவற்றுள் அர்ச்சகம், ஸ்தானீகம் பரிசாரகம் என்பனவற்றை முக்ய கைங்கர்யமாக மேற்கொண்டு பற்றுள்ளமுடையவர்களாய் ஊதியத்தில் நோக்கமில்லாது ஒழுகி வந்தார்கள்.

தற்பொழுது இக்குலத்தினர் தம் பழைய நிலைமையை நழுவவிட்டுச் சீரிய பகவத் கைங்கர்யத்தையுமிழந்து நிற்கின்றனர். இவ்வாறுனமைக்கு நவநாகரிகப் பேய் பிறஸமூகத்தாரைப் போன்று இவர்களையும் பிடித்தலைப்பதே முக்ய காரணமாகும். அதனுல் தம்

நிலைமை யறியாது அதிகச் செலவு செய்து தமக்குரிய கைங்கர்ய மிராசு பாத்யங்களை ஒற்றி கிரயம் முதலியவைகட் குட்படுத்தி வறுமை நிலையுற்றிருப்பதையும் யாவருமறிவர்.

இக்குலத்தினரை நன்கறிதற்கு அறிகுறியாயிருப்பது பூர்வ சிகையே யாகும். இவர்கள் தம்மொழுக்க முதலியவற்றிற் பின்னடைந்து வருவதுபோல் இவர்கள் சிகையும் பின்னடைந்தும் ஒழிந்தும் வருவது வருந்தத்தக்கது. நிற்க,

மற்றை ஸமூகத்தாரைப்போல இச்சமூகத்தாரும் தம்முரிமைகளை யடைதற்கும் தாங்கள் லௌகிக வைதிக விஷயங்களில் முன்னேற்றமடைதற்கும் பொருளாதாரத்துறையில் நன்னிலையடைதற்குமான வழிகளில் பத்திரிகை வெளியிடுதல் முதலியவற்றால் உழைப்பது இதன் முக்ய நோக்கமாகும்.

மேலும் நவீனநாகரீகங்களில் திருத்தமுற்றவராகத் தம்மை மதித்துக்கொண்டிருக்கிற சில ப்ரமுகர்கள் நமது அநாதிஸித்தமான சுருதீதிகாச புராணங்களைச் சிறிதும் ஆராயாமல் அரசாங்கத்தாரின் உதவியையும் தம் செல்வாக்கையுங்கொண்டு நமது முன்னோர்களால் நாட்டப்பட்ட ஒழுக்கங்களையும் கொள்கைகளையும் மாற்றி விபரீத பேதங்களை ஸ்தாபித்தற்கு முன்வந்துள்ளார்கள். இவரது கொள்கையும் நோக்கமும் நேர்பட்டனவல்லவாதலால் இவையெல்லாம் இச்சமூகத்தினர் புறக்கணிக்கத் தக்கனவே யாம்; என்று இங்குக் குறிப்பிடப்பெற்றவைகளே இப்பிரஸங்கத்தின் ஸாராம்சங்களாம். இதனால் அக்ராஸனரது லௌகிக சதுரப்பாடும், ஸம்ப்ரதாயத்தில் நுண்ணறிவும், தம் குலத்தினரை நன்னிலையிலுய்ப்பதில் ஊற்றமும் நன்கு வெளியாகின்றன.

இங்ஙனம் அக்ராஸனரது பிரசங்கம் இக்குலத்தினர்க்குப் பல வழிகளிலும் நன்மை தரத்தக்க நல்லுபதேசமாயிருத்தலால் இக்குலத்தினர் ஒவ்வொருவரும் அதனை நன்கு படித்து உள்ளவாறுணர்ந்தொழுகி மேன்மையுறும்படி நாம் மிகவும் பிரார்த்திக்கிறோம்.

ப. அ.

ஸ்ரீ:

அர்த்தவாதம்.

மாந்தரை நன்னிலையில் நிற்கச்செய்வதிலே நோக்குடைய சாஸ்திரமானது, நன்மையைச் செய்யென்று விதித்தும், தீமையை விடு என்று விலக்கியும் செல்கிறது. இங்ஙனம் கூறியபடி மக்கள் விதித்தவற்றைக் கையாண்டும் விலக்கியவற்றைக் கைவிட்டும் நிற்பதருமையாகும். ஆதலால் இவர்கட்கு விதி விலக்குகளில் முறையே பிரவிருத்தி, நிவிருத்தி யுண்டாவதற்கு விதி விஷயத்தில் ஸ்தோத்திரஞ் செய்தும் விலக்குகளில் நிந்தித்தும் உரைக்கத் தொடங்கியது. இங்ஙனம் கூறுவதைத்தான் அர்த்தவாதமென்பது. சாஸ்திரம் யாகம் தானம் முதலி ஸத்கர்மங்களை விதித்துப் பின்பு இவற்றைச் செய்தவன் பாபங்களினின்றும் விடுபட்டு ஸ்வர்க்க மோக்ஷங்களை யடைவான் என்று சொல்லியது இங்ஙனஞ் சொல்வதை ஸ்துதி ரூபமான அர்த்தவாதம் என்பார்கள். பரஸ்திரீகமனம், கொலை, களவு, புலாலுண்ணல் முதலிய அஸத்கர்மங்களைச் செய்யலாகாதென்று விலக்கிப் பின்பு இவற்றைச் செய்தவர்கள் நரகமெய்தித் துன்புறுவார்கள் என்று சொல்லியது. இங்ஙனங் கூறுவதை நிந்தா ரூபமான அர்த்தவாதம் என்பர்கள். திருக்குறள் முதலிய தமிழ் நூல்களில் பலவிடங்களிலும் அர்த்தவாதம் நிறைந்துள்ளன.

மதிப்புரை.

தமிழ்ப் பேரகராதி:—சென்னைச் சருவகலா சங்கத்தார் நீண்ட பல காலமாக விடாமுயற்சியுடன் உழைத்துப் பதிப்பித்து வரும் இவ்வகராதியின் மூன்றாவது தொகுதியின் நான்காவது பகுதி இப்பொழுது வெளியாயிருக்கிறது இதில் 'செப்பக்கால்' என்னும் மொழி முதல் 'தம்பனகாரன்' என்னும் வார்த்தை இறுதியாகப் பயில்வோர் பலருக்கும் பயனளிக்கத் தக்க எத்துணையோ பல அருஞ்சொற்கட்குப் பொருள் எழுதப்பட்டுள்ளது. இப்பணியை மேற்கொண்டிருக்கும் அதிகாரிகள் இதில் முக்பகவனஞ் செலுத்தி யிருத்தல் மிகுந்த மகிழ்ச்சி யளிக்கிறது. 155 பக்கங்களுள்ள இப்பகுதியின் விலை ரூ. 2. வேண்டுவோர் The Madras law gournal office, Post Box 604, Mylapore, Madras. என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்க.

பத்திராதிபர்.